## இயல் 8 - 8.1 ஒன்றே குலம்

1. திருமூலர், திருமந்திரம் பற்றி நீவீர் அறிந்த செய்திகளை எழுதுக.
   - திருமூலர் 63 நாயன்மார்களில் ஒருவர்.
   - பதினெண் சித்தர்களில் ஒருவர்.
   - திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர்.
   - 3000 பாடல்களைக் கொண்ட நூல் இது.
   - பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறை நூல்.

2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்யவேண்டியது யாது?

மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர், மனிதர் அனைவரும் ஒரே இனம், இறைவன் ஒருவனே என்பதை ஏற்றல், அடியவர்களாகிய மக்களுக்குக் காணிக்கை கொடுத்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும்.

3. மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

படங்கள் அமைந்த கோயிலில் இருக்கக்கூடிய இறைவனுக்கு ஒரு பொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால், அப்பொருள் நடமாடும் கோயில் ஆகிய உடம்பை உடைய அடியார்களுக்குச் சேராது. ஆகையால் அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இறைவனுக்குக் கொடுப்பதைப் போன்றதாகும்.